# பாடம் 43: நோயில் பூசுதல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், பாவங்களின் மன்னிப்புக்கான அருளடையாளமாக இருக்கிற ஒப்புரவு அருளடையாளம் குறித்து நாம் கற்றோம். அந்த அருளடையாளம் நமது ஆன்மிக நலம் பெறுதலுக்கானதாக இருக்கிறது. இந்த பாடத்தில், நமது உடல் சார்ந்த நலத்திலும் இயேசு அக்கறை கொண்டுள்ள இயேசு, உடலளவில் நோயுற்றோருக்காக நமக்கு வழங்கியுள்ள அருளடையாளம் பற்றி நாம் கற்போம்: நோயில்பூசுதல் அருளடையாளம்.

**தற்போதைய பாடம்:**
1. நோயும் துன்பமும் மனிதப் பிரச்சனைகளில் கொடுமையானவை, அவை தொடக்கப் பாவத்தின் விளைவாக வருகின்றன. அண்மைய கோவிட்-19 பெருந்தொற்று, மனிதர்களின் தொடக்கப் பாவம், தனிநபர் பாவம், மற்றும் முறைநிலை பாவம் ஆகியவற்றின் விளைவுகளை மனிதகுலம் அனைத்திற்கும் நினைவூட்டுவதாக இருக்கிறது. தொடக்கப் பாவமே நோயையும் இறப்பையும் கொணர்ந்தது.

2. இந்த அருளடையாளம் நோயினால் துன்புறுவோருக்கு வலுவூட்டுகிறது.

3. நம் ஆண்டவர் இயேசு தமது திருப்பணி பாதையில் நோயுற்ற மக்களை பலரைச் சந்தித்தார், அவர்களுக்கு அவர் பேரிரக்கம் காட்டினார்.

4. "நோய் அல்லது முதுமையால் ஆபத்தில் இருக்கும் பொழுது" இந்த அருளடையாளம் கோரப்படுகிறது (திச 1004).

5. இறப்பின் ஆபத்தில் இருந்தோருக்கு மட்டுமே வழங்கப்பட்டு படிப்படியாகப் பரிணமித்த இந்த அருளடையாளம், முற்காலத்தில் "அவஸ்தை பூசுதல்" என்று அழைக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-65), திருத்தூதரியத் திருச்சபையில் இது கொண்டிருந்த வகிநிலையைப் புதுப்பித்துள்ளது.

6. இந்த பூசுதல் மாற்கால் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டு, திருத்தூதரும் நம் ஆண்டவர் இயேசுவின் சகோதரருமான யாக்கோபால் பலரறியச் செய்யப்பட்டது (கதிம 1511).

*மாற்கு 6:13*: "அவர்கள் (பன்னிருவரும்) பல பேய்களை ஓட்டினர், நோயுற்றிருந்தப் பலரை எண்ணெய் பூசி நலமாக்கினர்."

*யாக்கோபு 5:14-15*: "உங்கள் நடுவே எவரேனும் நோயுற்றிருக்கிறாரா? அவர் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும், அவர்கள் அவருக்காகச் செபித்து, ஆண்டவரின் பெயரால் (அவர் மீது) எண்ணெய் பூசட்டும். விசுவாசமுள்ள செபம் நோயுற்றவரைக் காப்பாற்றும், ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் ஏதேனும் பாவங்கள் செய்திருந்தார், அவர் மன்னிக்கப் படுவார்."

7. குரு நோயுற்றவர் மீது கைகளை வைத்து, திருச்சபையின் விசுவாசத்தோடு அவர்களுக்காக மன்றாடுகிறார், மேலும் நோயுற்றோர் எண்ணெய்யால் அவர்களைப் பூசுகிறார் (கதிம 1519).

8. கடைநிலைச் சடங்காக நிறைவேற்றப்படும் பொழுது, இது ஒப்புரவு, உறுதிபூசுதல் (அது குறைவுபட்டால்), நோயில்பூசுதல், மற்றும் வழியுணவை (லத்தீனில் *வியாத்தீக்கும்*, "நீங்கள் வழிப்பயணத்தில் எடுத்துச் செல்வது") உள்ளடக்கியுள்ளது.

9. நோயில்பூசுதலின் விளைவுகளாவன:

அ) *தூய ஆவியாரின் ஒரு குறிப்பிட்டக் கொடை* (கதிம 1520): தீவிர நோய் அல்லது முதிர் வயதின் இயலாமை நிலையில் வருகின்ற இடர்களை வெற்றி கொள்வதற்கான வலுவூட்டல், அமைதி மற்றும் துணிவு.
ஆ) *கிறிஸ்துவின் பாடுகளுடன் ஒன்றிப்பு* (கதிம 1521): நோயுற்றவர் வலிமை மற்றும் கிறிஸ்துவின் துன்பத்தில் மிக நெருக்கமாக ஒன்றிக்கும் கொடையைப் பெறுகிறார்.
இ) *திருச்சபைக்குரிய ஓர் அருள்* (கதிம 1522): நோயுற்றவர் திருச்சபையின் புனிதப்படுத்தல் மற்றும் திருச்சபை துன்புற்றுத் தன்னைக் கையளிக்கிற எல்லா மக்களின் நன்மைக்காக பங்களிக்கிறார்
ஈ) *இறுதிப் பயணத்திற்கான ஒரு தயாரிப்பு* (கதிம 1523): திருமுழுக்கில் தொடங்கியதைப் போன்று, கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுடனான நமது ஒத்திணங்கலை இந்த பூசுதல் நிறைவு செய்கிறது.

10. நோயுற்றவர் எப்பொழுதும் நலமடைவாரா? அவரது ஆன்ம மீட்புக்கு அது உகந்ததாக இருந்தால் நலம் அடையலாம். மற்றபடி, இந்த அருளடையாளம் நித்திய வாழ்விற்கு கடந்து செல்வதற்கு அவரைத் தயாரிக்கிறது (கதிம 1532).

11. இன்று சில கிறிஸ்தவர்கள் இறை நலமாக்கலில் தங்கள் எதிர்பார்ப்பின் உச்சங்களுக்குச் செல்கின்றனர். இந்த இருவித உச்சங்களும் தவறாகும்:

ஒரு புறம், ஒரு கிறிஸ்தவர் தமது நோய்களில் இருந்து முழுவதும் நலமடையவில்லை எனில், அது அவரது விசுவாசக் குறைபாட்டைக் காட்டுகிறது என்று சிலர் கூறுகின்றனர். கடவுள் எப்பொழுதும் நமது நலிவுகளை நீக்க மாட்டார். திருத்தூதரியத் திருச்சபையிலும், அனைவரும் தங்கள் நோயிலிருந்து நலமடையவில்லை. திமொத்தேயு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, அவர் அடிக்கடி உடல் நலிவுற்றார் (1திமொ 5:23).

மறு புறம், இறை நலமாக்கல்கள் திருத்தூதர் காலத்தில் மட்டுமே நிகழ்ந்தன, அவை இன்று நிகழ்வதில்லை என்று வேறு சிலர் கூறுகின்றனர். ஆனால் திருத்தூதர் புனித யாக்கோபு, ஒருபோதும் அது விலக்கப்படக் கூடாது என்று யாக்கோபு 5:14-15ல் கட்டளையிடுகிறார்.

12. எல்லாவற்றையும் போன்று, நமது நலமடைதலும் கடவுளின் விருப்பத்திற்கு உட்பட்டது. நாம் நலமடைதலின் வாக்குறுதியைக் கொண்டுள்ளோம், ஆனால் தகுதியற்றவருக்கு அன்று. அது கடவுளின் விருப்பத்தின் நிபந்தனைக்கு உரியது.

13. கிறிஸ்தவர்கள் மருத்துவம் சார்ந்த சிகிச்சைகளின் அவசியத்தைப் புறக்கணிக்காமல் இருக்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

14. கடவுள் நலமாக்கவில்லை என்றாலும், நோய் மற்றும் இன்னலைச் சந்திக்கிறதன் விளைவாக, எப்பொழுதும் ஆன்மிக ஒழுக்கமும் பயிற்சியும் கிடைக்கிறது. கடவுள் அடிக்கடி இந்த சோதனைகளை நமது புனிதமாக்கலுக்காக அனுமதிக்கிறார். மற்றவர்களுக்கு உதவவும் அவர் நமது துன்பங்களைப் பயன்படுத்துகிறார். நாம் நோயால் துன்புற்றால், அதை நன்மை செய்வதற்கான ஒரு வாய்ப்பாக நாம் நோக்க வேண்டும், நமது துன்பங்களை நமது புனிதமாக்கலுக்காகவும், கிறிஸ்துவில் இறந்த நமது சகோதர சகோதரிகளுக்காகவும் ஒப்புக் கொடுக்கலாம்.